2010 மே 11]

சுத்தமாக வழங்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தேயிலை சாகுபடி பரப்பளவு 71,922 எக்டர். கோயம்புத்தூர், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய எல்லா மாவட்டங்களிலும் சேர்த்து உற்பத்தியாகின்ற தேயிலை 6 இலட்சத்து 47 ஆயிரத்து 298 டன். இங்கு நம்முடைய திரு. கோவை தங்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு அளித்த பதிலைத்தான் மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். TANTEA நிறுவனம்மூலம்தான் கொள்முதல் செய்யப்படுகிறது, அரசு கொள்முதல் செய்வதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

163—

ஆசிரியர் பயிற்சி

***57849—திரு. கு. ஹசன் அலி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதியில் ஆசிரியர் பயிற்சி மையம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் தொகுதியில் ஆசிரியர் பயிற்சி மையம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்குள்ள அனைவருக்கும் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் இந்த அவையிலே நான் எழுந்திருக்கும்போது, கலைஞர் அவர்கள் எங்களுடைய தொகுதிக்கு ஆற்றிய பணிகளுக்காக நன்றியைத் தெரிவிக்காமல் ஆரம்பிப்பது இல்லை. ஏனென்றால் வறட்சியும், வறுமையும் நிறைந்த இராமநாதபுரத்திலே 2006–லே நான் சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்றபோது இருந்த குண்டுகுழி, சாக்கடைகள் நிறைந்த சாலைகள் இப்போது வந்திருக்கும் வசதிகளையெல்லாம் நினைத்து கலைஞர் அய்யா அவர்களுடைய ஆட்சி எங்கள் இராமநாதபுரத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு பொற்கால ஆட்சி என்பதை நான் மகிழ்வோடு இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கருணையோடு எங்கள் பகுதிக்கு பொறியியல் கல்லூரி தந்ததற்கும், அதற்கு ஆதரவாக பரிந்துரை செய்த, நேற்றையதினம் 80 நிமிடங்கள் தன்னுடைய கடமையைக் கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் செய்த, தேனி போன்ற சுறுசுறுப்புடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் ஊருக்கு வந்து இடத்தை உடனே பார்வையிட்டு, அந்த ஆண்டிலேயே பொறியியல் கல்லூரி வருவதற்கு வசதி செய்த, அமைதியான தோற்றமும், புயல்போன்ற, சீற்றமான ஆற்றல் உடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *9–45*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. கு. ஹசன் அலி: எங்களுடைய இராமநாதபுரம், கீழக்கரையிலே இரண்டு கலைக் கல்லூரிகள் உள்ளன. இவை எல்லாம் தனியார் கல்லூரிகள். பரமக்குடியிலே ஓர் அரசு கலைக் கல்லூரியும், இராமநாதபுரத்தில் ஓர் ஆண்கள் அரசு கலைக் கல்லூரியும், பெண்கள் அரசு கலைக் கல்லூரியும் உள்ளன. அந்தக் கல்லூரிகளிலே பட்டம் பெற்ற மாணவர்கள் B.Ed., M.Ed.,

2010 மே 11]

போன்ற படிப்புகளைப் படிக்க வேண்டுமென்றால், தனியார் கல்லூரிகளைத்தான் நாட வேண்டியிருக்கின்றது. தனியார் கல்லூரிகள் வசூலிக்கக்கூடிய கட்டணங்களை அந்த மாணவர்களால் கட்ட முடியவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து இருப்பார்கள். ஆகவே, இராமநாதபுரத்திற்கு மிக அவசியமான இந்தக் கல்லூரியைக் கொண்டு வர அவர்கள் ஆவன செய்வார்களா? அதனைக் கொண்டுவருவதற்கு உடனடியாக சாத்தியம் இல்லாவிட்டால்கூட, இப்போது இருக்கும் கல்லூரியில் ஒரு பகுதியை அரசுக் கல்லூரியில் வசூலிக்கும் கட்டணத்தின்படி வசூலிக்கும் வகையில் ஒதுக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். இவையெல்லாம் எங்களது இராமநாதபுரத்திற்கு வருவதற்கு உறுதுணையாக இருந்த, எங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருக்கும் மாண்புமிகு அமைச்சர் திரு. சுப. தங்கவேலன் அவர்களுக்கும் நன்றி கூறி, உங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே கல்வி வளர்ச்சிக்காக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்றுதான் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய பொறியியல் கல்லூரியினை நானே அங்கு சென்று இடத்தினைப் பார்வையிட்டு தொடங்கி வைத்திருக்கிறேன். ஆசிரியர் பயிற்சிக்காக 7 தனியார் கல்லூரிகள் அங்கே இயங்கிக்கொண்டிருக்கின்றன. தமிழகத்திலேயே முதன்முதலாக, இந்தியாவிலேயே இந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு பல்கலைக்கழகத்தினை உருவாக்கியிருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பது நமக்குப் பெருமை. அந்தப் பல்கலைக்கழகத்தின் கீழே 645 கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. B.Ed. பயில்பவர்களுக்கு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 11

ஆசிரியர் பயிற்சி கொடுத்துக்கொண்டு இருக்கின்ற காலகட்டத்தில், மேலும் கல்லூரிகளை இங்கே அனுமதிக்கக்கூடாது என்றுகூட நாங்கள் N.C.E.R.T.–க்கு எழுதி இருக்கிறோம். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இப்போது No objection கொடுப்பதில்லை. ஆகவே, இப்போது இருக்கின்ற கல்லூரிகளிலே, படிக்கின்ற மாணவர்களுக்கு சீனியாரிட்டி மூலம்தான் வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன என்கிற காரணத்தினால் அந்தக் கல்லூரிகளிலே கூட்டம் சரியாக வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அரசுத் தரப்பிலே, மேலும் கல்லூரியினைத் தொடங்குகின்ற எண்ணம் இப்போது இல்லை.

திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லியது அனைத்தும் எங்களுக்கு தெரிந்திருந்தாலும், கட்டணம் செலுத்த முடியாத ஏழை மாணவர்களுக்காகத்தான் நான் இந்த வினாவை எழுப்பினேன். 2011 ஆம் ஆண்டிலேயும் தமிழகத்திற்கு 6–வது முறையாக தலைவர் கலைஞர் அவர்கள்தான் முதல்வராக வரப் போகிறார் என்று ஒரே பேச்சாகவே இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள்; ஆறாவது முறையாக நம்முடைய கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்கும்போதாவது இந்தக் கலைக் கல்லூரி வருவதற்கு நீங்கள் உறுதியளிப்பீர்களா என்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை மொத்தமே இருக்கின்ற அரசு கல்வியியல் கல்லூரிகள் ஏழுதான். ஆறாவது முறை கலைஞர் அவர்கள் மாண்புமிகு முதல்வராக வருகின்றபோது எட்டாவது கல்லூரியினை உங்கள் மாவட்டத்தில் தொடங்குவதற்கு நிச்சயமாக ஏற்பாடுகளைச் செய்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.